ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# தத்வோபதேஶம்



# தத்வதர்ஶிவசனம்



ஸ்ரீ நம்மாழ்வார்
ஆழ்வார் திருநகரி



அழகிய மணவாளப்
பெருமாள் நாயனார்

தொகுத்தவர்

திருக்கண்ணபுரம் ஸ்ரீ உ.வே. சடகோபாச்சாரியார்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# தத்வோபதேஶமும்
# தத்வதர்ஶிவசனமும்

தொகுத்தவர் :

திருக்கண்ணபுரம் **ஸ்ரீ உ.வே.சடகோபாச்சாரியார்**

திருக்கண்ணபுரம்

**ஸ்ரீ உ.வே.சடகோபாச்சாரியாரின்**

முதலாமாண்டு நினைவு நாளன்று வெளியிடப்பட்டது.

C/o VIDVAN. Ka. Ka.
Appan Ramanujacharlar Swamy
Vedanta Mimamsa Vyakarana Siromani
SRIPERUMBUDUR

STD Code : 044 ☏ : 2716259 5
Mobile : 98431 3203 3
"LAKSHMI BHAVAN"
No. 18, North Mada Street
SRIPERUMBUDUR
Kanchi Dt., Tamil Nadu
Pincode : 602 105.

[illegible]

[illegible],

[illegible]

[illegible]

[illegible]

# தத்வோபதேஶமும் தத்வதர்ஶிவசனமும்

*சேயன் அணியன் சிறியன் மிகப்பெரியன்*
*ஆயன் துவரைக்கோனாய் நின்ற மாயன் அன்*
*றோதிய வாக்கதனைக் கல்லார் உலகத்தில்*
*ஏதிலராம் மெய்ஞ்ஞானமில்* **(நான். திரு.71)**

இப்பாசுரம் நம்மாழ்வாருக்கு முன்பு அவதரித்த திருமழிசையாழ்வார் வாக்கு. கண்ணனாகப் பார்த்தன் தன் தேர் முன் நின்று உபதேசித்த கீதையே மெய்ஞ்ஞானத்தின் உறைவிடம் என்கிறார் ஆழ்வார்.

பின்பு அவதரித்த நம்மாழ்வார் வாக்கில் பிறந்த திருவாய்மொழி, கண்ணனின் உபதேசத்தில் கூறிய எல்லாவற்றையும் உள்ளடக்கியிருப்பதால் இது கீதாஸமம் என்கிறார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். கீதையில் சொல்லிய ப்ரதான விஷயங்களைக் கீழ்க்கண்டவாறு நாயனார் பட்டியலிடுகிறார்.

"மனஞ்செய் எல்லையில் ஞானவின்பத்தை நின்மலமாக வைத்தவர், ஞானப்பிரானை ஞானத்து வைம்மின் என்றவிது 1. தத்வவிவேக 2. நித்யத்வாநித்யத்வ 3. நியந்த்ருத்வ 4. ஸௌலப்ய 5. ஸாம்ய 6 & 7. அஹங்காரேந்த்ரியதோஷ பல 8. மன:ப்ராதான்ய 9. கரணநியமன 10. ஸுக்ருதிபேத 11. தேவாஸுரவிபாக 12. விபூதியோக 13. விஶ்வரூபதர்ஶன 14. ஸாங்கபக்தி 15. ப்ரபத்தித்வைவித்யாதிகளாலே அன்றோதிய கீதாஸமமென்னும். (ஆசார்யஹ்ருதயம் - 189)

ஆழ்வார் ஶாஸ்த்ரவிஹிதமான கர்மஞான யோகங் களினால் வந்த பக்தியை அடையாமல், மயர்வற மதிநலமருளப் பெற்று, அந்த பகவத்ப்ரஸாதமடியாக ஞானம் முதலில் பரபக்தி

ரூபமாய், பரபக்தியானது பரஜ்ஞானமாகி, பரஜ்ஞானம் பரமபக்தியாகி, அந்த பரமபக்தியாகிற அமுதக்கடல் நிரம்பி வழிய பக்திப் பெருக்காலே வந்த அந்தாதியாகத் திருவாய்மொழி மலர்ந்தது.

எல்லாப் பொருட்களுக்கும் தன் ஸங்கல்பரூபமான ஞானத்தாலேயே காரணமானவன் எம்பெருமான்.

*நினைந்து நைந்துள்கலந்துருகி இமையோர் பலரும் முனிவரும்*
*புனைந்த கண்ணிநீர் சாந்தம் புகையோடேந்தி வணங்கினால்*
*நினைந்தவெல்லாப் பொருள்கட்கும் வித்தாய் முதலில் சிதையாமே*
***மனஞ்செய்*** *ஞானத்துன்பெருமை மாசூணாதோ மாயோனே* **(1.5.2)**

இந்த பகவத்ஸங்கல்பத்துக்கு ஓர் எல்லையில்லை என்கிறார் ஆழ்வார்.

*அல்லலின்பமளவிறந்தெங்கும் அழகமர் சூழொளியன்*
*அல்லி மலர்மகள் போகமயக்குகள் ஆகியும் நிற்குமம்மான்*
***எல்லையில் ஞானத்தன்*** *ஞானமஃதேகொண்டு எல்லாக் கருமங்களும் செய்*
*எல்லையில் மாயனைக் கண்ணனைத்தாள் பற்றியானோர் துக்கமிலனே* **(3.10.8)**

"சுடர்ஞானவின்பமே" என்று ப்ரகாசரூபனும் ஸுகரூபனுமானவன் என்று எம்பெருமானைச் சொல்லுகிறார்.

*சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில்பெரும்பாழேயோ*
*சூழ்ந்ததனில்பெரிய பரநன்மலர்ச் சோதீயோ*
*சூழ்ந்ததினில்பெரிய* ***சுடர்ஞான இன்பமே****யோ*
*சூழ்ந்ததினில்பெரிய என் அவாவறச் சூழ்ந்தாயே* **(10.10.10)**

ஸங்கல்பரூப ஞானத்தாலேயே ஸகலஜகத்துக்கும் காரணமான ஒளிக்கொண்ட சோதி மயமான ஆனந்த ஸ்வரூபனை தெள்ளத் தெளிய அனுபவித்தவர் ஆழ்வார்

*அறிந்தறிந்து தேறித்தேறியான் எனதாவியுள்ளே*
*நிறைந்த ஞானமூர்த்தியாயை* ***நின்மலமாக வைத்துப்***
*பிறந்தும்செத்தும் நின்றிடறும் பேதைமை தீர்ந்தொழிந்தேன்*
*நறுந்துழாயின் கண்ணியம்மா நானுன்னைக் கண்டு கொண்டே*
***( 4.7.7 )***

தமக்கு மயர்வற மதிநலமருளிய எம்பெருமானை ஞானப்பிரான் என்கிறார்.

*ஈனச்சொல்லாயினுமாக எறிதிரை வையம்முற்றும்*
*ஏனத்துருவாயிடந்தபிரான் இருங்கற்பகம்சேர்*
*வானத்தவர்க்கும் அல்லாதவர்க்கும் மற்றெல்லாயவர்க்கும்*
***ஞானப்பிரானை****யல்லாலில்லை நான்கண்டநல்லதுவே*
***( திருவிருத்தம் - 99 )***

ப்ரளயவெள்ளத்திலே மூழ்கினபூமியை வராஹாவதாரமாக வந்து மேலே நிறுத்திய ஞான *ஶ*க்த்யாதிகளையுடையவனும் ஸகல ஜகத்துக்கும் ஸ்வாமியானவனும் வராஹ சரம*ஶ்*லோகத்தால் சரமோபாயத்தை வெளியிட்டு ஞானோபகாரகனானவனைத் தவிர உய்ய வேறு வழியில்லை என்று சொல்லி அவனை உங்கள் உள்ளத்தில் வைத்தீர்களானால் நீங்கள் உய்வு பெறலாம் என்று ஸம்ஸாரிகளுக்கு உபதே*ஶி*க்க வந்தது இந்த பாசுரம்.

*விளம்புமாறுசமயமும் அவையாகியும் மற்றும்தன்பால்*
*அளந்து காண்டற்கரியனாகிய ஆதிப்பிரானமரும்*
*வளங்கொள் தண்பணை சூழ்ந்தழகாய திருக்குருகூரதனை*
*உளங்கொள்* ***ஞானத்துவைம்மின்*** *உம்மை உய்யக் கொண்டு*
*போகுறிலே* ***( 4.10.9 )***

இவ்வாறு திருவாய்மொழியின் அவதாரத்தின் ஏற்றத்தைச் சொல்லி கீதைக்கும் இதற்குமுள்ள ஒற்றுமைகளைக் காட்டுகிறார், நாயனார்.

தர்மத்தை நிலை நாட்டுவதற்காக அவதரித்த கண்ணன்

अस्थानस्नेहकारुण्य धर्माधर्मधियाऽऽकुलम्
पार्थं प्रपन्नमुद्दिश्य शास्त्रावतरणंकृतम् **(गीतार्थसंग्रह–५)**

என்கிறபடியே தகாத விஷயத்தில் ஸ்நேகத்தையும் கருணையையும் காட்டி எது தர்மம் எது அதர்மம் என்று பகுத்து அறிய முடியாத அர்ச்சுனன் தெளிவு பெறுவதற்காக எம்பெருமான் கீதையை உபதேசித்தார். "யுத்தம் செய்யேன்" என்று கலங்கின புத்தியால் சொன்ன அர்ஜுனன், கண்ணனிடம் शिष्यस्तेऽहं शाधि मां त्वाम् प्रपन्नं என்று தன்னை சிஷ்யனாக ஏற்றுத் தனக்கு சரியான வழியைக் காட்டுமாறு பிரார்த்திக்க, அவனுக்குச் சொல்லும் முகமாக லோகத்துக்கு உஜ்ஜீவனமாக அவதரித்தது கீதை.

திருவாய்மொழியும் லோகோஜ்ஜீவனமாகத் தோன்றியது என்பதை "உறாமையோடே உற்றேனாக்காதொழிந்தது" (சூத்ரம் 229) என்று தொடங்கும் ஸூத்ரத்தில் "நாடுதிருந்த" என்று நாயனார் சொல்லுகிறார்.

கண்ணன் உபதேசத்தின் நோக்கத்தை ஆழ்வார்

*"அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவரறிய*
*நெறியெல்லாமெடுத்துரைத்த நிறைஞானத்தொரு மூர்த்தி*
***( 4.8.6 )***

என்கிறார்.

தன்னையடையும் உபாயங்களை சேதனர் நின்ற நின்ற நிலைகளுக்கு ஈடாக உபாய பேதங்களை கர்மயோகம் முதலாக

ப்ரபத்திபர்யந்தமாக ஸகல உபாயங்களையும் (நெறியெல்லாம்) வ்யக்தமாக உபதேசித்தான். உபதேசித்தவனோ நிறை ஞானத்தொரு மூர்த்தி - நித்யமானதும், அபௌருஷேய மானதுமான வேதங்களை ஸ்மரித்துச் சொன்ன பரிபூர்ண ஞானமுடைய அத்விதீயஸ்வரூபத்தையுடையவன்.

இனி நாயனாரின் மேற்கூறிய ஸூத்ரத்தில் உள்ள எம்பெருமானின் பெருமைகளைக் காட்டும் விதமாக அமைந்துள்ள கீதோபநிஷத் ஸ்லோகங்களையும் தமிழ்மறைப் பாசுரங்களையும் ஒப்பு நோக்குவோம்.

## 1. தத்வவிவேக

கண்ணன் கீதோபதேசத்தைத் தொடங்கும்போதே ஜீவபர பேதமும் ஜீவர்களுக்குப் பரஸ்பரபேதமும் நித்யமென்பதை வெளியிடுகிறான்.

नत्वेवाहं जातु नासं नत्वं तेमे जनाधिपा:
नचैव न भविष्याम: सर्वेवयं अत:परम् (२.१२)

ஸர்வேஶ்வரனான நானும் நீயும் இந்த மன்னர்களும் எக்காலத்திலும் உளராவர். என்னைப் போலவே இந்த ஆத்மவர்க்கங்கள் நித்யம்.

அசித்தான தேகம் பரிணாமமடையும். எப்படி ஒரு சரீரத்திலிருக்கும் ஆத்மா அந்த சரீரம் பால, யௌவன மூப்புப் பருவமடைந்ததனால் வருந்துவதில்லையோ அதே போல் அந்த சரீரத்தை விட்டுப் போகும் போதும் வருந்த வேண்டியதில்லை.

देहिनोऽस्मिन् यथा देहे कौमारं यौवनं जरा ।
तथा देहान्तरप्राप्ति: धीरस्तत्र न मुह्यति।। (२.१३)

ஆழ்வார்-அடியேனுள்ளான் உடலுள்ளான் அண்டத்தகத் தான் புறத்துள்ளான் (8.8.2) என்று சொல்லி ஆத்மாவும் தேஹமும் வேறு என்று காட்டுகிறார். மேலும்,

*நின்றவொன்றையுணர்ந்தேனுக்கு அதனுள் நேர்மை அது விதுவென்று*
*ஒன்றுமொருவர்க்குணரலாகாது உணர்ந்து மேலும் காண்பரிது*
*சென்று சென்று பரம் பரமாய் யாதுமின்றித் தேய்ந்தற்று*
*நன்றுதீதென்றறிவரிதாய் நன்றாய் ஞானங் கடந்ததே* **(8.8.5)**

என்றும் கூறுகிறார்.

நின்ற ஒன்று என்பதால் அழிவில்லாத ஆத்மாவைச் சொல்லி, சென்று சென்று பரம்பரமாய், என்பதால் தேஹ, இந்த்ரிய, மனஸ், ப்ராணன், புத்தி ஒன்றுக்கொன்று மேலாய் இவற்றுக்கு அப்பாற்பட்டதாய் இந்த்ரியங்களுக்கு எட்டாத தாயிருக்கும் என்கிறார்.

देहेन्द्रियमनः प्राण धीभ्योऽन्यः अनन्यसाद्यः (ஆளவந்தார் ஸித்தித்ரயம் - ஆத்மஸித்தி)

## 2. நித்யத்வ - அநித்யத்வ

अन्तवन्त इमे देहा नित्यस्योक्ताः शरीरिणः ।
अनाशिनोऽप्रमेयस्य तस्माद्युध्यस्व भारत ।। (२.१८)

இந்த உடல்கள் எப்படியும் அழியும். இந்த உடலை உடைய ஆத்மா நித்யமானது. நித்யமான ஆத்மாக்கள் கர்மபலத்தை அனுபவிக்க அடைந்த சரீரங்கள், கர்மாக்கள் கழியும் போது நாசமடைகின்றன. இந்த இடத்தில் इमे देहाः என்று தன்னை தவிர்த்த வேறு தேகங்களைக் கண்ணன் குறிக்கிறான். ஈசுவரசரீரம் கர்மத்தாலல்லாது தன் இச்சையால் ஏற்பட்டதால் இத்தை வேறுபடுத்துகிறான்.

न जायते म्रियते वा कदाचित्
नायं भूत्वा भविता वा न भूयः।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो
न हन्यते हन्यमाने शरीरे।। (२.२०)

நித்யமான ஆத்மாவிற்குப் பிறப்பு, இறப்பு கிடையாது. அதனால் உடல் இறக்கும்போது ஆத்மா இறப்பதில்லை.

वासांसि जीर्णानि यथा विहाय
नवानि गृह्णाति नरोऽपराणि।
तथा शरीराणि विहाय जीर्णानि
अन्यानि संयाति नवानि देही।। (२.२२)

எப்படி மனிதன் கிழிந்த உடைகளை எறிந்துவிட்டுப் புதியவை அணிகிறானோ அப்படியே பழைய சரீரத்தை விட்டு தேகத்திலுள்ள ஆத்மா புதிய உடலை அடைகிறது. (புதிய உடை அணிவதில் ஒருவன் என்ன இன்பம் அடைகிறானோ அதே போல் புதிய உடலை அடைவதிலும் இன்பம் அடைவதே தகுந்தது - கீதாபாஷ்யம்)

தேகத்தின் நிலையில்லாத்தன்மையையும் ஆழ்வார் இவ்விதம் தெரிவிக்கிறார்.

*மின்னின்னிலையில - மன்னுயிராக்கைகள்*
*என்னுமிடத்து - இறையுன்னுமின் நீரே* (1.2.2)

ஆத்மாக்கள் கர்மபலத்தை அனுபவிக்கப்பெற்ற சரீரங்கள் மின்னல் போலவும் கூட நிலைத்திராதவை - நித்யர்களான ஆத்மாக்கள் அடைந்த சரீரங்கள் நிலையில்லாதவை. இதை யாரும் தானே உணரலாம். (ஆகையால் நீங்கள் இறைவனை த்யானம் செய்யுங்கள்)

सम्पदः स्वप्नसङ्काशाः यौवनं कुसुमोपमम्।
तडिच्चञ्चलमायुश्च कस्यस्याज्जानतो धृतिः।

ஐஶ்வர்யம் கனவையொத்தது. இளமை மலரை நிகர்த்தது. ஆயுள் மின்னலைப் போல் நிலையில்லாதது. இதை உணர்ந்த

எவன் தைரியமாக இருக்க முடியும்? அஸ்திரமென்று ஹிதத்தில் ப்ரவர்த்திக்கவொட்டாது ஸ்திரமென்று விஶ்வஸிக்கப்பண்ணும்.

*இல்லதும் உள்ளதும் அல்லது அவனுரு*
*எல்லையிலந்நலம் புல்கு பற்றற்றே* **(1.2.4)**

சித் அசித் வஸ்துக்கள் எல்லாமே நித்யமாயிருக்க இல்லது என்பானேன் என்னில், இல்லது என்பது பரிணாமத்தை ஸ்வபாவமாக உடைய அசித் வஸ்துக்களையும், உள்ளது என்பது என்றும் ஒரு நிலையான ஆத்மாவைக் காட்டுகிறது என்றும் கொள்ள வேண்டும்.

இதே முறையை விஷ்ணுபுராணத்திலும்,

ज्योतींषि विष्णुर्भुवनानि विष्णुर्वनानि विष्णुर्गिरयो दिशश्च।
नद्यस्समुद्राश्च स एव सर्वं यदस्ति यन्नास्ति च विप्रवर्य
(वि.पु.-२.१२.३८)

என்கிற ஶ்லோகத்தில் अस्ति என்று நித்யவஸ்துவான ஆத்மாவையும் नास्ति என்று அசித்தையும் குறிப்பிடுவதைக் காணலாம்.

## 3. நியந்த்ருத்வ

भूमिरापोऽनलो वायु: खं मनो बुद्धिरेव च।
अहङ्कार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा।। (७.४)

अपरेयमितस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम्।
जीवभूतां महाबाहो ययेदं धार्यते जगत्।। (७.५)

அனுபவிக்கையும் அனுபவிக்க உதவுபவையும் அனுபவிக்குமிடங்களுமான இந்த பஞ்சபூதங்களும், மனம் முதல் இந்த்ரியங்களும், மஹதஹங்காரங்களும் என்று எட்டுபடிப்பட்டிருக்கும்.

என்னுடைய ப்ரக்ருதி இவற்றிலிருந்து வேறுபட்டு (இந்த அசேதனங்களிலிருந்து வேறுபட்டு) இந்த அசேதன ஜகத்தை செயல்பட வைக்கிறது.

सर्वस्य चाहं हृदि सन्निविष्टो
मत्तः **स्मृतिर्ज्ञानमपोहनञ्च।**
वेदैश्च सर्वैरहमेव वेद्यो
वेदान्तकृद्वेदविदेव चाहम्।। **(१५.१५)**

இவையெல்லாவற்றிலும் நான் உள் புகுந்து நிற்கிறேன். என்னிடமிருந்து இவை நினைவை அடைகின்றன. அறிவு, அனுமானம் ஆகியவையும் என்னிடமிருந்தே வருகின்றன. எல்லா வேதங்களினாலும் நானே அறிப்பட வேண்டியவன். எல்லா தேவதைகளையும் நான் அந்தர்யாமியாக இருந்து செயல்படவைக்கிறேன்.

अन्तः प्रविष्टः शास्ताजनानां सर्वात्मा என்றும்

य आत्मनि तिष्टन्नात्मनोऽन्तरो यमयति என்றும்

சொல்லுகிற ஶ்ருதி வாக்யங்களை அடியொற்றிச் சொல்கிறான்.

*स्मृति – पूर्वानुभूतविषयं अनुभव संस्कार मात्रजं ज्ञानं*
*ज्ञानं – इन्द्रियलिङ्गागम योगजो वस्तु निश्चयः*
*अपोहनं – ज्ञाननिवृत्तिः ऊहनं वा* **(गीता भाष्यम्–१५.१५)**

*திடவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை*
*படர்பொருள் முழுவதுமாய் அவையவை தொறும்*
*உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்*
*சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே* **( 1.1.7 )**

பஞ்சபூதங்களிலும் அவற்றாலுண்டான பதார்த்தங்கள் ஒவ்வொன்றிலும் உடலில் ஆத்மா எப்படி சரீரியாக இருக்கிறதோ அப்படி ஆத்மாவை சரீரமாகக் கொண்டு முடிவில் இவற்றை ஸம்ஹரிப்பவன் ஸர்வேஶ்வரன்.

अनेन जीवेन आत्मनानुप्रविश्य नामरूपेव्यकरवाणि என்றும்

अन्त: प्रविष्ट: शास्ता जनानां सर्वात्मा என்றும் சொல்கிற ஶ்ருதிவாக்யானு குணமாகச் சொல்கிறது.

*பரந்த தண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்*
*பரந்த அண்டமிதென நிலவிசும்பொழிவற*
*கரந்தசிலிடந்தொறும் இடந்திகழ் பொருள்தொறும்*
*கரந்தெங்கும் பரந்துளன் இவை யுண்ட கரனே* **(1.1.10)**

ஜலம் முதலிய ஸகல வஸ்துக்களினுடைய பரமாணுக்களிலும் அண்டாவகாசத்திற்போலே வ்யாபித்திருக்கும். இவற்றைச் சரீரமாக உடைய ஆத்மாக்களிலும் கண்ணுக்குத் தெரியாமல் வியாபித்திருக்கிறான்.

*நின்றனர் இருந்தனர் கிடந்தனர் திரிந்தனர்*
*நின்றிலர் இருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்*
*என்றுமோரியில்வினர் என நினைவரியவர்*
*என்றுமோரியல்வொடு நின்றவெந்திடரே* **(1.1.6)**

ஸகலவஸ்துக்களுடையவும் அவற்றுள் இருக்கும் ஆத்மாக்களுடையவும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் அவன் அதீனம். இப்படி அநேக ப்ரகாரனாயிருந்து கொண்டு காலதத்வமுள்ளதனையும் ஆராய்ந்தாலும் இன்னபடிப்பட்டவன் என்ன முடியாதபடி அபரிச்சேத்யனாயிருப்பன். என்றும் அபரிச்சேத்யனானதால் என்றும் ஒருபடிப்பட்டிருப்பான் என்றும் சொல்கிறார். “எம்” என்று இந்த ஞானம் தமக்குப் பிரகாசிக்கையாலே தாம் பெற்ற பேற்றைச் சொல்லுகிறார்.

## ஸௌலப்ய

இப்படி அபரிச்சேத்யமான வஸ்துவை நாம் ஆश्ரயிக்கக் கூடுமோ என்னில், அவன் பரமோதாரன், ருசி பிறந்தவர் களுக்குக் கேட்ட மாத்திரத்தில் ஆश्ரயிக்கலாம்படி, ஸங்கல்பத்தாலே தன் அப்ராக்ருத திவ்யமங்களவிக்ரஹத்தை இதரஸஜாதீயமாக்கிக் கொண்டு இராமகிருஷ்ணாதிரூபத்தால் ஸுலபனாம்.

“எதிர்சூழல் புக்கு” என்றும் “என்னில் முன்னம் பாரித்து” என்றும் சேதனர்களுடைய விலக்காமையைத் தேடித் திரிகிறவன்.

त्वयि किञ्चित्समापन्ने किं कार्यं सीतया मम என்று, இன்று வந்த ஒரு குரங்கை, அகலகில்லேன் இறையுமென்றிருக்கிற பிராட்டிக்கும் மேலானதாக நினைத்திருப்பது அவன் நீர்மை.

இந்த எளிமை உகவாதார்க்கும் பொதுவோ என்கிறதைப் பரிஹரிக்கிறது “பிறர்களுக்கரியவித்தகன்” என்று. இந்த இரண்டு குணங்களுக்கும் அடி, மலர்மகள் விரும்புவது. பெரிய பிராட்டியார் விரும்பும்படி இருக்கை ஸர்வாதிக வஸ்துவுக்கு லக்ஷணம்.

ஸம்ஸாரபந்தத்திலிருந்து எல்லாரையும் விடுவிப்பவன் இப்படிக் கட்டுண்டிருந்தான். “உரலோடிணைந்திருந்து” என்று அசேதனமான உரலுக்கும் அவனுக்கும் வித்தியாசம் காணமுடியாதபடி இருந்தான். ‘ஏங்கியிருந்து’ என்றவளவில் மட்டுமே வேறுபாடு இருந்தது.

यदि शक्नोषिगच्छत्वमतिचञ्चलचेष्टित।
इत्युक्त्वाऽथ निजंकर्म सा चकार कुटुम्बिनी।।

என்று, ஓயாமல் துருதுருவென்றிருக்கும் நீ முடிந்தால் விடுவித்துக் கொண்டு போ என்று சொல்லி அவள் தன்

வேலைகளில் மூழ்கிவிட்டாள். परास्य शक्तिर्विविधैव श्रूयते என்று சொல்லப்படுகிற வஸ்து இப்படி இவளுக்கு எளிதானதே என்று ஆழ்வார் மோகிக்கிறார்.

ஆஶ்ரிதர்க்கு ஸுலபனாக தூது போயும் ஸாரத்யம் செய்தும் நின்றவனே பரத்வம் தோற்ற விஶ்வரூபத்தைக் காட்டினான்.

**ஸாம்ய**

समोऽहं सर्वभूतेषु न मे द्वेष्योऽस्ति न प्रिय: (९.२९)

தேவ, மனுஷ்ய, பிராணி, தாவரம் என்ற சதுர் விதமான ஸ்ருஷ்டியிலும் நான், ஜாதி, உருவம், ஸ்வபாவம், ஞானம் முதலியவற்றால் மிகத்தாழ்ந்தோ மிகவுயர்ந்தோ இருந்த போதிலும் என்னை அடைய விரும்புபவர்க்கு நான் ஒரு தன்மையானயிருப்பேன். நான் யாரையும் த்வேஷிப்பதில்லை. என்னால் ஒதுக்கப்பட்டவன் யாரும் இல்லை. என்னிடத்தில் மிகுந்த பிரீதியுடன் என்னைத் துதித்தாலல்லது இருக்க முடியாமல், என்னைத் துதிப்பதையே ப்ரயோஜனமாக இருப்பவர் எவரானாலும் அவர் உயர்ந்தவரானாலும் தாழ்ந்தவரானாலும் எனக்கு உகந்தவரே.

இங்கு ஆழ்வாருடைய வாக்கு

*பற்றிலனீசனும் முற்றவும்நின்றனன்*
*பற்றிலையாய் அவன் முற்றிலடங்கே* ***(1.2.6)***

பற்றிலன் என்பதைப் பற்றை இருப்பிடமாக உடையவன் என்றும் (பற்று+இல்+அன்), பற்றிலான் என்பதில் 'லா' குறைந்து பற்றில்லாதவன் என்றும் இரண்டுபடியாக வியாக்யானம் செய்கிறார்கள் பூர்வர்கள்.

நித்யாஶ்ரிதர்களான நித்யஸூரிகள் முக்தர்கள் பக்கல் ஸங்கத்தை தவிர்ந்து இன்று ஆஶ்ரயித்தவர்களைத் தாரகாதிகளாகக் கொண்டிருப்பான். அதனால் நீயும் மற்ற ஸங்கத்தை விட்டு அவனையே எல்லாமாகப் பற்று என்கிறார். நிரபேக்ஷனான ஈஶ்வரன் க்ஷுத்ரரான நம்மை ஏற்றுக் கொள்வானோ என்னில், அவன் ஆஶ்ரிதன் எல்லா பக்கலிலும் ஒரே மாதிரியாக இருப்பன். समोऽहं सर्वभूतेषु என்கிறபடியே ஆஶ்ரயணியத்வே ஸமனாய் நின்றான்.

**அஹங்காரேந்த்ரிய தோஷ பல** என்பது அஹங்கார தோஷ, இந்த்ரிய பல என்று அந்வயித்துக் கொள்ள வேணும்.

## அஹங்காரதோஷ

प्रकृते:क्रियमाणानि गुणै:कर्माणि सर्वश:
अहङ्कारविमूढात्मा कर्ताहमिति मन्यते (३.२७)

ப்ரக்ருதியின் ஸத்வ,ரஜஸ்,தமோகுணங்களால் தன்னால் செய்யப்படும் காரியங்களுக்கு, அஹங்காரத்தினால் புத்தியிழந்தவன், தானே செய்வதாக எண்ணுகிறான். அஹங்காரமாவது நான் என்ற பொருளுக்கு இலக்காக இல்லாத ப்ரக்ருதியை நான் என்று நினைப்பது.

*நீர்நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து இறை*
*சேர்மினுயிர்க்கு அதன்நேர் நிறையில்லை* *( 1.2.3 )*

ஆழ்வார், நான், எனது என்ற சொற்களை ஸம்ஸாரிகள் விஷயத்தில் கூட உபயோகப்படுத்தமுடியாதபடி, அவ்வளவு அஞ்சுகிறார். அதனால் நீர், நுமது என்கிறார். ஸம்ஸாரத்துக்குக் காரணம் அஹங்கார மமகாரங்களென்றும் அதற்கு மருந்து இன்னதென்றும் அருளிச்செய்கிறார்.

अनात्मन्यात्मबुद्धिर्या अस्वे स्वमिति या मतिः
अविद्यातरुसम्भूतिबीजमेतद् द्विधा स्थितम्

(वि. पु.–६.७.११)

என்று ஸம்ஸார பீஜமும்

अच्युताहं तवैवास्मि सैव सम्सारभेषजम् என்று பரிஹாரமும் சொல்லிற்றிறே.

**இந்த்ரிய பலம்**

यततो ह्यपि कौन्तेय पुरुषस्य विपश्चितः।
इन्द्रियाणि प्रमाथीनि हरन्ति प्रसभं मनः।। (२.६०)

விஷயங்களில் பற்று அறுந்தால் தான் ஆத்மஜ்ஞானம் பெறமுடியும். இந்த்ரியங்களின் பல மிகுதியால் ஆத்ம ஞானம் பெற பெருமுயற்சி செய்பவனும் விஷயங்கள்பால் ஈர்க்கப்படுகின்றான். ஆக இந்த்ரிய ஜயமும் ஆத்மஞானமும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதால் ஞானம் பெறுவது மிகக்கடினம்.

ஆழ்வார் 'உண்ணிலாவைவர்' என்கிற திருவாய்மொழியில் இந்த்ரியங்கள் எப்படி ஒருவனை நோவுபடுத்துகிறதென்று காட்டுகிறார்.

*விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையும்*
*செறுமைம்புலனிவை*
*மண்ணுளென்னைப்பெற்றால் என் செய்யாமற்று நீயும் விட்டால்*
*பண்ணுளாய் கவிதன்னுளாய் பத்தியினுள்ளாய், பரமீசனே,*
*வந்தென்*
*கண்ணுளாய் நெஞ்சுளாய் சொல்லுளாயொன்று சொல்லாயே*
*(7.1.6)*

முந்தினதிருவாய்மொழியில் ‘அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன்’ என்று *ஶ*ரணம் புகுந்த போதும், பலியாதது ஏன் என்று பார்த்து நாட்டாரெல்லாரும் இந்த்ரியவ*ஶ்*யராய்க் கிடந்து நோவு படுகிறபடியைக் கண்டு *மனமாளும் ஓரைவர் வன்குறும்பரான* இந்த்ரியங்களுக்குப் பயப்பட்டுக் கூப்பிடுகின்றார். ஒரு பிரஜை தாய்முகத்திலே விழித்துக்கொண்டு புலியின் வாயிலே கிடந்து நோவுபடும் நிலையை இப்பாட்டின் முதலிரண்டு அடிகள் காட்டுகின்றன என்று பிள்ளைத் திருநரையூரரையர் நிர்வாகம்.

அயர்வறும் அமரர்களதிபதிக்கடிமை செய்பவர்களையும், உடன் பிறந்து இளையபெருமாளைப் போலே அடிமை செய்வாரையும் ஐம்புலன்கள் ஆக்ரமிக்கும் என்கிறார்.

## மந:ப்ராதான்ய

அர்ஜுனன் சொல்லுகிறான்.

चञ्चलं हि मन: कृष्ण प्रमाथि बलवद्दृढम्।
तस्याहं निग्रहं मन्ये वायोरिव सुदुष्करम् **(६.३४)**

இந்த ஆத்மா தேவாதி*ஶ*ரீரங்களின் பேதங்களையும் ஜீவனுக்கும் ஈ*ஶ்*வரனுக்கும் உள்ள பேதத்தையும் நெடுங் காலமாக உணர்ந்திருக்கிறது. அப்படியிருக்க எங்கும் ஸமதர்*ஶ*ன ரூபமான (ஞான உருவாயிருப்பதால் ஆத்மாக்களுக்கும், கர்மாவிலிருந்து விடுபடுவதால் ஈ*ஶ்*வரோனோடும் பேதம் இவையிரண்டும் மறைய) நீ உபதேசித்த யோகத்தை அனுஷ்டிப்பது முடியாதென்று நினைக்கிறேன். ஏனெனில், நின்றவாநில்லா மனம் ஒரு நிலைப்பட்டிருப்பது எதிர்த்துவரும் காற்றைத் திருப்புவதற்கு ஒப்பாகும்.

கண்ணன் பதில் சொல்லுகிறான்.

असंशयं महाबाहो मनो दुर्निग्रहं चलम्।
अभ्यासेन तु कौन्तेय वैराग्येण च गृह्यते। (६.३५)

ஒரு நிலையில்லாத மனத்தை அடக்குவது மிகக் கடினம் என்பதில் ஸந்தேஹமில்லை. ஆனாலும் ஆத்ம குணங்களாலும் (ஶமதமாதி) தொடர்ந்த பயிற்சியாலும், ஈடுபாடு கொள்வதாலும், ஆத்ம ஞானத்தைத் தவிர்ந்த இதர விஷயங்களில் பற்றறுப்பதாலும் ஒருவாறு மனத்தை வெல்லலாம்.

*என் கொள்வனுன்னை விட்டென்னும் வாசகங்கள் சொல்லியும்*
*வன்கள்வனேன் மனத்தை வலித்துக் கண்ணநீர் சுரந்து*
*நின்கண் நெருங்கவைத்தே எனதாவியே நீக்ககில்லேன்*
*என் கண் மலினமறுத்து என்னைக் கூவியருளாய் கண்ணனே*
*( 5.1.4 )*

ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் இதர விஷயங்களில் ப்ரவணமான மனத்தை அவற்றிலிருந்து மீட்டு உன் பக்கலிலே ஈடுபடும்படி செய். மனத்தை மீட்டு என்று சொல்லாமல் 'வலித்து' என்றது ப்ரக்ருதி ஸம்பந்தத்தில் மனதிற்கு உள்ள உறுதியை எண்ணி மனஸ்ஸை உன்பக்கலிலே கொண்டு சேர்த்து நிரந்தரமாக அநுஸந்திக்க வை என்கிறார்.

அன்றிக்கே பக்தி பாரவஶ்யத்தாலே தளர்ந்த மனதை அதாவது 'காலாழும் நெஞ்சழியும்' என்கிறபடியே உன்னைக் கிட்டினவாறே சிதிலமடைந்த மனதை தரித்து நின்று உன்னை அநுஸந்திக்கும்படி பண்ண ஶக்தியுடையவனல்லேன். நானே விரோதியைப் போக்கிக்கொண்டு கிரமத்தில் வந்துசேர்வேன் என்றிராதே, நீயே விரோதியைப் போக்கி என்னையழைத்துக் கொள்ள வேணும். பக்தி உபாயமன்று என்று சோகித்தவனுக்கு உபதேசம் செய்தவனன்றோ நீ.

**கரண நியமன (இந்த்ரியங்களை அடக்குதல்)**

तानि सर्वाणि संयम्य युक्त आसीत मत्परः।
वशे हि यस्येन्द्रियाणि तस्य प्रज्ञा प्रतिष्ठिता।। (२.६१)

வெல்ல அரிதான இந்த்ரியங்களை அடக்கி மனத்தை எல்லையில் நலத்துக்கு இருப்பிடமான என்னிடம் வை. என்பால் மனம் இருந்தால் எல்லா தோஷங்களும் கழிந்து நிர்மலமாகி விஷயங்களில் பற்றற்று இந்த்ரியங்களைத் தன் வசப்படுத்தும். அப்படி இந்த்ரியங்களைத் தன் வசப்படுத்திக் கொண்ட மனம் ஆத்மஜ்ஞானம் பெற வல்லதாகிறது.

यथाऽग्निरुद्धतशिखः कक्षं दहति सानिलः।
तथा चित्तस्थितो विष्णुः योगिनां सर्वकिल्बिषम्

(वि. पु.-६.७.७४)

காற்றுடன் கூடிய நெருப்பு எப்படித் தன் கிளர்ந்த ஜ்வாலையால் எல்லாவற்றையும் எரிக்கிறதோ, அப்படி யோகிகளின் உள்ளத்திலுள்ள விஷ்ணு எல்லாமாசுகளையும் எரிக்கிறார்.

सर्वद्वाराणि सम्यम्य मनो हृदि निरुध्य च।
मूर्ध्न्याधायात्मनः प्राणं आस्थितो योगधारणाम्।। (८.१२)

காது முதலான எல்லா ஞானேந்த்ரியங்களையும் அடக்கி, தங்கள் செயல்களினின்றும் திருப்பி யோகம் செய்பவன் என்னிடமிருந்து விலகாத நிலையை அடைவான்.

*உள்ளம் உரை செயல் உள்ள இம்மூன்றையும்*
*உள்ளிக்கெடுத்து இறை உள்ளிலொடுங்கே* **(1.2.8)**

மனோ வாக் காயங்கள் என்ன பிரயோஜனத்திற்காக உண்டாயின என்று ஆராய்ந்து அப்ராப்யமான புற

விஷயங்களில் ஈடுபடுவதைத் தவிர்ந்து அவன் பக்கலில் வை என்கிறார், ஆழ்வார்.

## ஸுக்ருதிபேத

चतुर्विधा भजन्ते मां जनास्सुकृतिनोऽर्जुन।
आर्तो जिज्ञासुरर्थार्थी ज्ञानी च भरतर्षभ॥ (७.१६)

ஸத்கர்மமுள்ளவர்கள் என்னை ஶரணமடைந்து என்னையே பூஜிக்கிறார்கள். அவர்கள் ஸுக்ருதி வித்யாஸத்தால் நான்கு வகைப்பட்டவர்கள். அவர்களுடைய ஸத்கர்மத்தின் கனத்தினாலும் ஈடுபாட்டின் சிறப்பாலும் ஒருவருக்கொருவர் மேம்பட்டிருப்பார்கள்.

முதலாவது ஆர்த்தன்: உறுதிகுறைந்தவன் இழந்த ஐஶ்வர்யத்தை மீண்டும் அடைவதற்காக ஈஶ்வரனை ஶரணம் அடைந்தவன்.

இரண்டாவது அர்த்தார்த்தீ: முன்பில்லாத ஐஶ்வர்யத்தை அடைய விரும்புபவன். இவ்விருவருக்கும் அடையவேண்டியது ஒன்றாயிருப்பதால் ஒரே விதமான தகுதியுடையவர்கள்.

மூன்றாவது ஜிஞ்ஞாஸு: மேற்சொன்ன இருவரிலும் விசேஷமானவன். பிறப்பு, இறப்புகளிலிருந்து விடுபட விரும்பி ஞானமே தன் ஸ்வரூபமென்றிருப்பவன்; அதாவது जननमरणमोक्षाय என்கிறபடியே கைவல்யத்தை விரும்புபவன்.

நான்காவது ஞானி: நால்வரில் மேலானவன்.

अपरेयमितस्त्वन्यां प्रकृतिं विद्धिमे पराम् (7.5) என்கிறதனால் தேர்ந்த எம்பெருமானுக்கே ஶேஷமாயிருப்பது ஆத்மஸ்வரூபம் என்று உணர்ந்தவன். ப்ரக்ருதியிலிருந்து விடுபட்டு ஆத்மானுபவத்தில் திளைப்பதைத் தவிர்ந்து எம்பெருமானையே பரமப்ராப்யமாகக் கொள்பவன்.

இந்த நான்கு வகையினரையும் ஆழ்வார் 'ஒரு நாயகமாய்' என்கிற திருவாய்மொழியில் விவரிக்கிறார்.

*ஒரு நாயகமாயோடவுலகுடனுண்டவர்*
*கருநாய் கவர்ந்தகாலர் சிதைகிய பானையர்*
*பெருநாடு காணவிம்மையிலே பிச்சைதாங்கொள்வர்*
*திருநாரணன்தாள் காலம்பெறச் சிந்தித்துய்ம்மினோ.* **( 4.1.1 )**

ஸார்வபௌமராய்ப் போந்த ராஜாக்கள் அந்த ராஜ்யஸ்ரீயை இழந்து, பிச்சையெடுத்து ஜீவிக்கும்படி துர்க்கதி அடைந்தவர்கள். நெடுநாள் மதிப்போடே ஜீவித்துப் போந்தவன், செல்வம் போனபின் பிச்சையெடுத்து உண்டு பின்னும் ஒரு நாள் இழந்த செல்வத்தைப் பெறலாம் என்றிருப்பான். இப்படி ஐந்து பாட்டுக்கள் வரை ஐஶ்வர்யத்தை இழக்காமல் ஜீவித்தவர் களில்லையோ என்ற கேள்விக்கு அவர்கள் வாழ்வே விநாஶமென்கிறார். பெருமழைக்குமிழி போலே அநந்தரம் விழுந்த துளியோடே நசித்துப் போகும் என்கிறார்.

*குணங்கொள் நிறைபுகழ் மன்னர் கொடைக்கடன் பூண்டிருந்து*
*இணங்கியுலகுடனாக்கிலும் ஆங்கவனையில்லார்*
*மணங்கொண்டபோகத்துமன்னியும் மீள்வர்கள் மீள்வில்லை*
*பணங்கொளரவணையான் திருநாமம்படிமினோ.* **( 4.1.8 )**

இப்படி ஐஶ்வர்யத்தை அடைந்தவர்கள் ஸ்ருஷ்டி காலந்தொடங்கி இற்றையளவும் ஒருபடிப்பட ஜீவித்தே போந்தார்கள் என்பது கிடையாது.

ஐஶ்வர்யம் ஸ்வார்க்கானுபவம் இவை அஸ்திரமென்றார் கீழ். கைவல்யமாகிற ஆத்மலாபம் நிலைநின்ற புருஷார்த்த மாயிற்றே என்னில், பகவதாநந்தத்தைக் காட்டிலும் அது தாழ்ந்ததே என்கிறார்.

*குறுக மிக வுணர்வத்தொடு நோக்கி எல்லாம் விட்ட*
*இறுகலிறப்பென்னும் ஞானிக்கும் அப்பயனில்லையேல்*
*சிறுக நினைவதோர் பாசமுண்டாம் பின்னும்வீடில்லை*
*மறுகலிலீசனைப்பற்றி விடாவிடில் வீடஃதே.* (4.1.10)

இறுகலிறப்பென்று கைவல்யத்தின் தாழ்ச்சியைச் சொல்லி இந்தப்பாசுரத்திலேயே 'மறுகலிலீசனைப் பற்றி விடாவிடில் வீடஃதே' என்று பரமபுருஷார்த்தத்தை உபதேசிக்கிறார். ஒவ்வொரு பாசுரத்தையும் திருநாரணன்தாள் சிந்தித்துய்மினோ, நம்மாயவன்பேர் சொல்லி வாழ்மினோ, கடற்பள்ளியண்ணல் அடியவராமினோ, ஆதியஞ்சோதி குணங்களே கோமின் அரவணையான் திருநாமம் படிமினோ, புள்ளுடை அண்ணல் கழல்கள் குறுகுமினோ என்று முடித்து முமுக்ஷுவே இந்த நான்கு வித ஆ*ஶ்*ரிதர்களில் மேலானவன் என்று சொல்லி கண்ணன் கழல்களே உய்யப்புகும் ஆறு என்று முடிக்கிறார்.

## தேவாஸுர விபாக

தேவர்கள் அஸுரர்கள் என்று இரண்டு விதமான ஸ்ருஷ்டியைச் சொல்கிறார்.

द्वौ भूतसर्गौ लोकेऽस्मिन् दैव आसुर एव च।
दैवो विस्तरशः प्रोक्त आसुरं पार्थ मे श्रुणु॥ (१६.६)

இந்த கர்மலோகத்தில் தேவர் என்றும் அஸுரர் என்றும் இரண்டு விதமான ஸ்ருஷ்டி உள்ளன. அனாதிகாலமாகச் சேர்ந்த புண்யபாப கர்மங்களினால், பகவானுடைய ஆஜ்ஞைக்கு உட்படுபவர், அதற்கு எதிராயிருப்பவர் என்று பிறக்கும்போதே பாகுபடுத்தப்படுகின்றனர். கர்மயோகம், ஞான யோகம், பக்தியோகம் முதலியவற்றை அனுஷ்டிப்பவர்களையும் பற்றிச் சொல்கையில் தேவஸ்ருஷ்டி விஸ்தாரமாகச்

சொல்லப்பட்டது. இப்பொழுது அஸுரராக ஸ்ருஷ்டிக்கப்படும் காரணத்தைக் கேள்.

ஆழ்வார் பல பாசுரங்களில் இந்த ஸ்ருஷ்டி பிரிவுகளைக் காட்டுகிறார்.

*வன்சரண் சுரர்க்காய் அசுரர்க்கு வெங்கூற்றமுமாய்*
*தன்சரண் நிழற்கீழ் உலகம் வைத்தும் வையாதும்*
*தென்சரண் திசைக்குத் திருவிண்ணகர் சேர்ந்தபிரான்*
*என்சரணென் கண்ணன் என்னையாளுடையென்னப்பனே*

**( 6.3.8 )**

*நண்ணாவசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த*
*எண்ணாதனகளெண்ணும் நன்முனிவரின்பம் தலைசிறப்ப*
*பண்ணார் பாடலின்கவிகள் யானாய்த் தன்னைத் தான் பாடி*
*தென்னாவென்னுமென்னம்மான் திருமாலிருஞ்சோலையானே*

**( 10.7.5 )**

## விபூதியோக

हन्त ते कथयिष्यामि विभूतीरात्मन: शुभा:।
प्राधान्यत: कुरुश्रेष्ठ नास्त्यन्तो विस्तरस्य मे।। **(१०.१९)**

என்னுடைய விபூதியின் உத்க்ருஷ்டமானவற்றைச் சொல்கிறேன். என் விபூதிக்கு எல்லையில்லாததால் முழுதும் விவரிப்பது இயலாது. விபூதி என்பவற்றின் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் என் அதீனம். இதை விவரித்து

अहमात्मा गुडाकेश सर्वभूताशयस्थित:।
अहं आदिश्चमध्यं च भूतानां अन्त एव च।। **(१०.२०)**

आदित्यानां अहं विष्णु: ज्योतिषां रविरंशुमान्।
मरीचिर्मरुतामस्मि नक्षत्राणां अहं शशी।। **(१०.२१)**

என்று குறிப்பிடுகிறார். 20 ச்லோகங்களில் தான் எந்தெந்த வர்க்கத்தில் எப்படி இருக்கிறோம் என்று சொல்லி முடிவில்

अथवा बहुनैतेन किंज्ञानेन तवार्जुन
विष्टभ्याहमिदं कृत्स्नमेकांशेन स्थितो जगत्।। (१०.४२)

என்று முடிக்கிறார்.

ஆழ்வார் மூன்று திருவாய்மொழிகளில் எம்பெருமானுடைய விபூதியோகத்தை விவரிக்கிறார்.

*புகழுநல்லொருவனென்கோ பொருவில்சீர் பூமியென்கோ*
*திகழுந்தண் பரவையென்கோ தீயென்கோ வாயுவென்கோ*
*நிகழுமாகாசமென்கோ நீள்சுடரிரண்டுமென்கோ*
*இகழ்விலிவ்வனைத்துமென்கோ கண்ணனைக் கூவுமாறே*

***(3.4.1)***

எம்பெருமான் இவருக்குத் தன் ஸ்வரூபகுணாதிகளை முழுவதும் காட்டிக்கொடுக்கக் கண்டு விபூதிகாரணமான பூதங்கள், பௌதிகங்கள் எல்லாம் எம்பெருமானே என்பேனோ என்கிறார். அடுத்த பாசுரங்களில் தொடர்ந்து உஜ்வலமான மாணிக்யாதிகள், ரஸமான பதார்த்தங்கள் செவிக்கினிய கானாதிகள், மோக்ஷாதி புருஷார்த்தங்கள், இந்த ஜகத்திற்கு ப்ரதானரான ப்ரஹ்மாதிகள் இவற்றையடையக் காரணமான ப்ரக்ருதி புருஷர்கள், இவையெல்லாவற்றையும் விபூதியாக உடையவனாய் இவற்றின் உள்ளே அந்தராத்மாவாகப் பிரவேசித்து நிற்கச் செய்தேயும் அவற்றின் தோஷங்கள் தட்டாதவனாக अनश्नन् अन्य: என்கிறார்.

द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते
तयोरेक: पिप्पलं अनश्नन्य: अभिचाकशीति।।

(मुण्डक ३.१.१)

என்கிற ப்ரமாண பலத்தாலே இந்த சேதனனுக்கு ஏற்படும் சுகதுக்கங்கள் தன் பக்கல் தட்டாததோடு இந்த ஸகல பதார்த்தங்களையும் குறிக்கும் சப்தங்களெல்லாம் அவன்வரை பர்யவஸிக்கையால் அஸாதாரணமான நாராயண சப்தத்தைப் போலவே, விபூதிவாசகமான சப்தங்களும் அவனையே சொல்லுகிறபடியையும், விரும்பியபடி எல்லா அடிமையும் செய்யப்பாரித்து அது மாட்டாமையால், அவன் 'கோவை வாயாளில்' சொல்லுகிறபடியே, ஒன்றையே எல்லாக் கைங்கர்யங்களுமாகக் கொள்ளும் ஸ்வபாவனாகையால் வாசிக கைங்கர்யத்தில் இழிந்து அத்தைச் சொல்வேனோ, இத்தைச் சொல்வேனோ, என்று அலமறுகிறார். முடிவில் 'யாவையும் யவரும்தானே' என்று ஸகலசேதனா சேதனங்களும் அவனுக்கு ப்ரகாரமாக நிற்கின்றன என்கிறார்.

*நல்குரவும் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய்*
*வெல்பகையும் நட்பும் விடமுமமுதமுமாய்*
*பல்வகையும் பரந்த பெருமான் என்னையாள்வானை*
*செல்வம்மல்கு குடித்திருவிண்ணகர்க் கண்டேனே* **(6.3.1)**

உலகில் ஒன்றுக்கொன்று விரோதமான பதார்த்தங்கள் என்னோடே சேர்ந்திருக்கிறபடியைப் பாரீர். ஆகையால் என்னோடு சேராதாரில்லை என்று தன்னுடைய விருத்தவிபூதி-கத்வத்தை ஆழ்வாருக்கு எம்பெருமான் காட்டித் தந்தான். உலகில் நிமித்தம் உபாதானமாகாது. உபாதானம் நிமித்தமாகாது இப்படியிருக்க இவையெல்லாம் தானாயிருக்கிறபடியையும், இவற்றோடு கூடியிருந்தும் இவற்றின் தோஷம் தனக்குத் தட்டாதிருப்பதையும் ஆழ்வாருக்குக் காட்டினான்.

*மாயா வாமனனே மதுசூதா நீயருளாய்*
*தீயாய் நீராய் நிலனாய் விசும்பாய்க் காலாய்*
*தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்*
*நீயாய் நீ நின்றவாறு இவையென்ன நியாயங்களே* **(7.8.1)**

எனக்கு இந்த ஸம்ஸாரத்தில் பொருந்தாமையிருக்க, என்னை இதில் வைத்து நடத்திக்கொண்டு போகிற ஆஶ்சர்யத்தைக் காட்டித் தரும்படி ஆழ்வார் கேட்க, 'இதைவிட ஆஶ்சர்யமான என் ஜகதாகாரதையைப்பார்' என்று எம்பெருமான் காட்டித் தந்தான். அக்ரூரன் நீருக்குள்ளும் கரையிலும் கண்ணனையும் பலராமனையும் கண்டு ஆஶ்சர்யப்பட்டதுபோல் இவரும் அவனுடைய விசித்ர ஜகதாகாரதையைக் கண்டு விஸ்மிதராகிறார்.

புகழு நல்லொருவனென்கோவில் ஸம்ஶயம். நல்குரவிலே விருத்தவிபூதி, இதிலே ஆஶ்சர்ய ஜகதாகாரதை. விசித்ரமான கார்யகாரணங்கள், சந்த்ரஸூர்யர்கள், க்ருதாதியுகங்கள், அவ்வோஸ்ருஷ்டிகள் நித்யாநித்யபதார்த்தங்கள் எல்லாம் விபூதியாகவுடையவன்.

## விஶ்வரூபதர்ஶனம்

இவ்வாறு கண்ணன் தன்விபூதியை விஸ்தரிக்க, அந்த விராட்ஸ்வரூபத்தைக் காண அர்ஜுனன் ஆசைப்படுகிறான். கண்ணன் 'அர்ஜுனனே!' இந்த உன் ப்ராக்ருதிகமான கண்களால் அதைக் காணமுடியாது. உனக்கு அப்ராக்ருதமான பார்க்கும் ஶக்தியைக் கொடுக்கிறேன் என்கிறான்.

दिव्यं ददामि ते चक्षुः पश्य मे योगमैश्वरम्॥ (११.८)

அப்படித்தன் ஸ்வரூபத்தைக் கண்ணன் காட்டித் தர அர்ஜுனன் சொல்லுகிறான்.

पश्यामि देवांस्तव देव देहे सर्वांस्तथा भूतविशेषसङ्घान्।
ब्रह्माणमीशं कमलासनस्थं ऋषींश्च सर्वानुरगांश्च दिव्यान्॥
(११.१५)

என்று தொடங்கி தான் கண்ட விராட் ஸ்வரூபத்தைத் தன் *ஶ*க்தியளவுக்கு விவரிக்கிறான்.

ஆழ்வார் முதலிலேயே மயர்வற மதிநலமருளப் பெற்றவராதலால் அவருக்குத் தனியாக திவ்யசக்ஷுஸ் தேவையில்லை.

*நீராய் நிலனாய் தீயாய்க் காலாய் நெடுவானாய்*
*சீரார் சுடர்களிரண்டாய் சிவனாயயனானாய்*
*கூராராழிவெண் சங்கேந்திக் கொடியேன் பால்*
*வாராய் ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே* **(6.9.1)**

என்று பாசுரமிடுகிறார். 'பொன்னுலகாளீரோ'வில் பக்ஷிகளைத் தூது விட்டு அவையும் போகமாட்டாமல் தூது செல்வார் வேறு யாரையும் காணாமல் பெருங்குரலெடுத்துக் கூப்பிடுகிறார். நம்முடைய ஜகதாகாரதையைக் காட்டி உம்மருகிலுள்ளவை யெல்லாம் நம் விபூதி என்று காட்டினோமே என்று எம்பெருமான் சொல்ல, இந்த ஜகதாகாரமான ஞானத்தையடைந்ததால் அந்த அஸாதாரண ஆகாரத்தைக் காண வேணுமென்று அவா உண்டாகிறது என்கிறார். அர்ஜுனன் கண்ட ஸ்வரூபத்தோடு 'கோலத் திருமாமகளோடு' என்று ஶ்ரிய: பதித்வத்தையும் காண்கிறார்.

## ஸாங்கபக்தி

मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु।
मामेवैष्यसि युक्त्वैवं आत्मानं मत्परायणः।। (९.३४)

இந்த *ஶ்*லோகத்துக்கு பாஷ்யமெழுதும் போது, 'मां' என்ற பதத்திற்கு எம்பெருமானார், எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுணாங்களை விஸ்தரேண அருளிச் செய்கிறார்.

मयि सर्वेश्वरे, निखिलहेयप्रत्यनीककल्याणैकताने, सर्वज्ञे, सत्यसंकल्पे, निखिलजगदेककारणे, परस्मिन् ब्रह्मणि, पुरुषोत्तमे, पुण्डरीकदलामलायताक्षे, स्वच्छनीलजीमूत संकाशे, युगपदुदित दिनकरसहस्र सद्दशतेजसि, लावण्यामृतमहोदधौ, उदारपीवरचतुर्बाहौ, अत्युज्वलपीताम्बरे, अमलकिरीट-मकरकुण्डलहारकेयूरकटकभूषिते, अपारकारुण्य सौशील्य-सौन्दर्यमाधुर्यगाम्भीर्यौदार्यवात्सल्यजलधौ, अनालोचितविशेषलोकशरण्ये सर्वस्वामिनि

என்று வர்ணிக்கிறார்.

அப்படிப்பட்ட என்னிடத்தில் தைலதாரை போல் இடையறாத சிந்தையனாய் இரு; எல்லையற்ற ப்ரீதியுடன் என்னை அனுபவிப்பதால் உண்டான மனத்துடன் என்னை பஜி; (பஜனம் என்பது முழுமையான ஶேஷவிருத்தி) என்னையன்றி தரித்திருக்கமுடியாத நிலையை அடைந்து என்னிடம் சேரலாம் என்கிறார்.

மீண்டும் 18வது அத்யாயத்தில்

मन्मनाभव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु
मामेवैष्यसि सत्यं ते प्रतिजाने प्रियोऽसि मे (१८.६५)

என்று இதை உறுதிப்படுத்துகிறார்.

வேதாந்த ஶ்ருதிகளில் சொல்லுகிற அறிதல், தியானித்தல், உபாஸித்தல் (वेदन, ध्यान, उपासन) போன்றவற்றால் குறிக்கப்படுகிற நேர்காணுதலுக்கு ஒப்பான மிகப்ரீதியை அளிக்கக்கூடிய நினைவையே मन्मना என்று சொல்லுகிறார் என்பது எம்பெருமானார் பாஷ்யம்.

प्रियोऽसि என்று சொல்லும்பொழுது प्रियो हि ज्ञानिनोऽत्यर्थं अहं स च मम प्रिय: (7.17) என்று முன்னமே சொன்னதைக் கொள்ள வேண்டும். எவருக்கு என்னிடத்தில் அளவற்ற ப்ரீதி உள்ளதோ அவர்களிடத்தில் நானும் அத்தகைய ப்ரீதி செய்து அவர்கள் பிரிவைப் பொறுக்காமல் அவர்களை என்னிடம் சேர்விக்கிறேன்.

மேலும் ப்ருக்ருதி ஸம்பந்தம் ஒருவராலும் வெல்ல முடியாதது. என்னை அடைபவர்களே இந்த மாயையைக் கடக்க வல்லவர்கள் என்று

दैवीह्येषा गुणमयी मम माया दुरत्यया।
मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते ।। (७.१४)

இந்த மாயை என்பது பொய் என்ற பொருள் கொண்டதல்ல. இது குணமயமான பகவன்மாயை. இந்த அர்த்தம் मायां तु प्रकृतिं विद्धि मायिनं तु महेश्वरम् (ஸ்வேதா 4.10) என்ற உபநிஷத் வாக்யத்தில் தெளிவாகிறது.

तमेव शरणं गच्छ सर्वभावेन भारत।
तत्प्रसादात्परां शान्तिं स्थानं प्राप्स्यसि शाश्वतम्।।
(१८.६२)

என்று எல்லாவற்றுக்கும் நியந்தாவாக, ஆஶ்ரித வாத்ஸல்யத்தினால் உனக்கு ஸாரதியாக நிற்கிற என்னை, என்று குறிக்கிறார்.

இப்படி द्रष्टव्यो श्रोतव्यो मन्तव्यो निधिध्यासितव्य: என்று ஶாஸ்த்ரங்கள் சொல்கிற ஸாங்க பக்தியை உபதேசித்துக் கடைசியில்,

सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज
अहं त्वा सर्व पापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः (१८.६६)

என்று ப்ரபத்தியை உபதேசித்துத்தலைக் கட்டுகிறார்.

மிகுந்த சிறப்பையுடைய ஸாதனங்களான, கர்ம யோக, ஞானயோக பக்தியோகங்களாகிற எல்லா தர்மங்களையும் தன் அதிகாரத்துக்குட்பட்டு என்னுடைய ஆராதனம் என்ற எண்ணத்துடன் மிக்க ப்ரீதியுடன் செய்யும் போது, அவற்றில் தான் செய்கிறோம் என்ற உணர்வைத் தவிர்த்து, பலனை எதிர்பார்க்காமல், என் ஒருவனையே, செய்பவன் ஆராதிக்கப் படுபவன், உபாயம், உபேயம் எல்லாமாக நினை. இதுதான் ஶாஸ்த்ரரீதியான ஸர்வதர்ம பரித்யாகம். இந்த அர்த்தத்தைக் கண்ணன், முன்னதாக விளக்கியிருக்கிறார்.

निश्चयं श्रुणु मे तत्र त्यागे भरतसत्तम ।
त्यागो हि पुरुषव्याघ्र त्रिविधस्सम्प्रकीर्तितः (१८.४)

என்று தொடங்கி

सङ्गं त्यक्त्वा फलं चैव स त्यागस्सात्त्विको मतः । (१८.९)

नहि देहभृता शक्यं त्यक्तुं कर्माण्यशेषतः
यस्तु कर्म फलत्यागी स त्यागीत्यभिधीयते (१८.११)

என்று முடிய சொல்லி ப்ரபத்திக்கு அங்கம் ஒன்றுமில்லை என்று சொல்லுகிறார்.

ஆழ்வார் ஸாங்கபக்தியைச் சொல்லும் போது "இப்படி ஆஶ்ரயணியனாய் ஸர்வஸுலபனான அவன் ஶ்ரீகீதையில் அருளிச் செய்த பக்தி மார்க்கத்தை ஆஶ்ரயிங்கள். அவன் சொன்ன அவன் விஷயமான ஞானத்தைக் கொண்டு விலக்ஷண விஷயத்தில் நெஞ்சை வைத்துப் புறம்பான

விஷயங்களை ஸவாஸனமாக விடுங்கள் என்றும் உபதேசிக்கிறார்.

*பிணக்கறவறுவகைச் சமயமும் நெறியுள்ளுரைத்த*
*கணக்கறு நலத்தனன் அந்தமிலாதியம்பகவன்*
*வணக்குடைத் தவநெறி வழிநின்று புறநெறிகளை கட்டு*
*உணக்குமின் பசையற அவனுடையுணர்வு கண்டுயர்ந்தே*

**( 1.3.5 )**

மேலும் அனன்யப்ரயோஜனராய் ஆஶ்ரயித்து உஜ்ஜிவியுங்கள். வேதத்தில் அவன் விபூதி விஷயமாக விரிவாகச் சொன்னதன்றி அஸாதாரண விக்ரஹத்திலும் குணங்களிலும் ஸ்வரூபத்திலுமாகப் பரந்திருக்கிற ஸ்ரீபுருஷ ஸூக்தாதிகளை நாக்கில் கொண்டு, பக்திபலாத் க்ருதமான க்ரியைகளில் ஒன்றும் தப்பாமே, பூ முதலிய ஆராதன உபகரணங்களோடு, குணாநுஸந்தானமே செய்கின்ற பெரியோர்களைப் பின்தொடருங்கள் என்று ஸம்ஸாரிகளுக்குச் சொல்லுகிறார்.

*மேவித்தொழுதுய்ம்மினீர்கள் வேதப் புனிதவிருக்கை*
*நாவில்கொண்டச்சுதன் தன்னை ஞானவிதி பிழையாமே*
*பூவில்புகையும் விளக்கும் சாந்தமும் நீரும் மலிந்து*
*மேவித்தொழுமடியாரும் பகவரும் மிக்கதுலகே* **( 5.2.9 )**

என்றும்

*மாலை நண்ணித்தொழுதெழுமினோ வினைகெட*
*காலை மாலை கமல மலரிட்டு*
*வேலை மோதும் மதிள்சூழ் திருக்கண்ணபுரத்து*
*ஆலின்மேலால் அமர்ந்தான் அடியிணைகளே* **( 9.10.1 )**

என்றும் ஸாங்க பக்தியையும்

*சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்*
*மரணமானால் வைகுந்தங்கொடுக்கும் பிரான்*
*அரணமைந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரத்*
*தரணியாளன் தனதன்பர்க்கன்பாகுமே* **( 9.10.5 )**

என்று ப்ரபத்தியையும் உபதேசிக்கிறார்.

*மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம்*
*மாநிலத்தெவ்வுயிர்க்கும்*
*சிற்றவேண்டா சிந்திப்பேயமையும் கண்டீர்களந்தோ*
*குற்றமன்றெங்கள் பெற்றத்தாயன் வடமதுரைப் பிறந்தான்*
*குற்றமில் சீர்கற்று வைகல்வாழ்தல் கண்டீர் குணமே* **( 9.1.7 )**

மாநிலத்தெவ்வுயிர்க்கும் என்பதால் ஸர்வாதிகாரத்தையும் சிந்திப்பேயமையும் என்று வேறு *ஶ*ாஸ்த்ரவிஹிதமான எந்த அங்கமுமின்றி அவனுடைய அகில ஹேயப்ரத்யனீக கல்யாண குணங்களை அநுஸந்தித்தே வாழலாமென்கிறார்.

"ஸாங்கபக்தி ப்ரபத்யாதிகளை" என்ற நாயனார் பங்க்தியில், ஆதி*ஶ*ப்தம் அவதார ரஹஸ்யம், ஆராதிப்பதற்கு எளியவன் ஆகியவற்றைக் குறிப்பதாக மாமுனிகள் திருவுள்ளம்.

जन्म कर्म च मे दिव्यमेवं यो वेत्ति तत्वत: ।
त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन ॥ (४.९)

இப்படி கர்மாவினால் முக்குணங்களுடைய ப்ரக்ருதி ஸம்பந்தம் அற்றவனும் அகில ஹேயப்ரத்யநீக கல்யாண குணங்களையுடையவனுமான என்னுடைய அஸாதாரணமான பிறப்பு, லீலைகள் இவற்றை அறிந்தவன் தான் இருக்கும் *ஶ*ரீரத்தைவிட்டு மீண்டும் வேறு பிறவிஅடைவதில்லை, என்னையே அடைகிறான்.

ஆழ்வாரும் கண்ணனுடைய லீலைகளை அனுபவித்து மோஹித்து அந்த அநுபவத்தை பாடலாக அவதரிப்பித்து அந்தப் பாடல்களை நன்கறிந்தவர்கள் பிறவிச்சிறையறுத்து நித்யஸூரிகளோடு ஒக்க இருப்பர் என்கிறார்.

*அமரர்கள் தொழுதெழ அலைகடல் கடைந்தவன்தன்னை*
*அமர்பொழில் வளங்குருகூர்ச் சடகோபன் குற்றேவல்கள்*
*அமர்சுவையாயிரத்து அவற்றினிவை பத்தும் வல்லார்*
*அமரரோடுயர்வில் சென்று அறுவர்தம் பிறவியஞ்சிறையே*

***(1.3.11)***

ஆராதிப்பதற்கு எளியவன்.

पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति
तदहं भवत्युपहृतं अश्नामि प्रयतात्मनः **(९.२६)**

மிகவும் ஸுலபமாகக் கிடைக்கும் இலை, பூ, பழம் அல்லது ஜலத்தைக் கொண்டு என்னை ஆராதித்தல்லது தரியாதவனாக, அந்த ஆராதனையே ப்ரயோஜனமாக மிக்க பிரியத்துடன் அளிப்பதை, ஸர்வேஶ்வரனான, அவாப்த ஸமஸ்தகாமனான நான், ப்ரீதியுடன் ஏற்றுக்கொள்கிறேன்.

ஆழ்வாரும்

*பரிவதிலீசனைப்பாடி விரிவது மேவலுறுவீர்*
*பிரிவகையின்றி நன்னீர்தூய் புரிவதும் புகைபூவே* ***(1.6.1)***

என்று அவனுடைய பூர்த்தியெல்லாம் ஸ்வாராததைக்கு உறுப்பாகும்படி ஶ்ரிய:பதியாய், ஸுஶீலனாகையாலே ஆஶ்ரயத்துக்கு எளியன் என்கிறார்.

நன்னீர் என்பது ஏலாதி ஸம்ஸ்காரமுமில்லாமல் என்றும்,

புகைபூவே என்பது ஏதேனும் புகையும் ஏதேனும் பூவும் அமையும் என்று நம்பிள்ளை வாக்கு.

இது பற்றி நஞ்சீயர் பட்டரிடம் नकण्टकारिका पुष्पं देवाय विनिवेदयेत् என்று ஶாஸ்த்ரம் சொல்லுகிறதே என்று கேட்க பட்டர் அவனுக்கு ஆகாததொன்றில்லை. ஆஶ்ரிதருக்கு முள் குத்துமே என்கிறதற்காக விதிக்கிறது" என்றார்.

பரமாசார்யரும்

त्वदङ्घ्रिमुद्दिश्य कदापि केनचित् यथा तथा वाऽपिसकृत् कृतोऽञ्जलि:।
तथैव मुष्णात्यशुभान्यशेषत: शुभानि पुष्णाति न जातु हीयते।।

(स्तोत्र रत्नम्-२८)

கதாபி என்பதால் காலநியமமில்லை என்றும் केनचित् என்பதால் அதிகாரி நியமமில்லை என்றும் यथा तथावाऽपि என்று க்ரமநியமமில்லை என்றும் सकृत् என்று உடன் பலனளிக்கும் என்றும் கூறுகிறார்.

இப்படியாக கீதைக்கும் ஆழ்வார் அருளிச்செயலுக்கும் உள்ள ஒற்றுமைளை விளக்கி பின் திருவாய்மொழி கீதையிலிருந்து எப்படி வேறுபடுகிறது என்றும், முன்னதன் மேன்மையையும் வெளியிடுகிறார்.

ஸூ.190 – "அது தத்வோபதேஶம்; இது தத்வதர்ஶிவசனம்" என்று நாயனார் ஸூத்ரமிடுகிறார்.

கண்ணன் தன்னுடைய ஸ்வரூபகுண விபூதி சேஷ்டிதங்களையும் ஜீவாத்மாவின் தன்மையையும் வெளியிட்டு

தன்னையடைய ஜீவாத்மா செய்ய வேண்டியதையும் உபதேஶிக்கிறார்.

ஆழ்வாரோ அவனால் மயர்வற மதிநலமருளப்பெற்று தர்ஶன ஸமானாகார மாநஸஸாக்ஷாத்காரத்தால் தாம்பெற்ற அனுபவத்தை ஸம்ஸாரிகளுடன் பகிர்ந்துகொண்டு அவர்களுக்கு உபதேஶிக்கவும் செய்கிறார்.

அடுத்து இந்த இரு க்ரந்தங்களும் அவதரிக்கக் காரணங்களைச் சொல்லி ஆழ்வார் அருளிச்செயலின் மேன்மையை எடுத்துக்காட்டுகிறார்.

191. "அது ஐவரை வெல்வித்து பதிற்றைந்திரட்டி படச்சொன்னது;

இது நாடாகத் தோற்றோமென்று ஐயைந்து முடிப்பான் சொன்னது"

கீதை பாண்டவர் ஐவரையும் வெற்றியடையச் செய்து கௌரவர் நூற்றுவரையும் மாளவைத்தது. ஆழ்வார் அருளிச் செயலோ "தோற்றோம் மடநெஞ்சமெம் பெருமான் நாரணற்கு" ஸர்வஶேஷியான எம்பெருமானிடம் சேதனர் உள்ளத்தைப் பறிகொடுக்கும்படியாக வந்தது.

*தோற்றோம் மடநெஞ்சம் எம்பெருமான் நாரணற்கு எம்*
*ஆற்றாமை சொல்லி அழுவோமை நீ நடுவே*
*வேற்றோர் வகையில் கொடிதாய் எனையூழி*
*மாற்றாண்மை நிற்றியோ? வாழி கனையிருளே* **(2.1.7)**

இவ்வாறு அவதரித்த இந்த ப்ரபந்தம் அசித் தத்வங்களான இருபத்து நான்குக்கும் இருபத்தைந்தாவது தத்வமான

ஞானானந்த ஸ்வரூபமான ஆத்மாவுக்கும் உள்ள ஸம்பந்தத்தை அறுத்து ஆத்மாவை உஜ்ஜீவிக்கப் பண்ணிற்று. இந்த 25 தத்வங்களும் ஒன்று போல் கிடந்த தன்மையை முடிப்பதற்காக சொன்னது.

*மங்கவொட்டு உன் மாமாயை திருமாலிருஞ்சோலைமேல்*
*நங்கள் கோனே யானே நீயாகி யென்னையளித்தானே*
*பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதம்*
*இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானாங்காரமனங்களே* ***( 10.7.10 )***

*அடிக்கீழமர்ந்து புகுந்து அடியீர் வாழ்மினென்று அருள் கொடுக்கும்*
*படிக்கேழில்லாப் பெருமானைப் பழனக்குருகூர்ச்சடகோபன்*
*முடிப்பான் சொன்ன ஆயிரத்துத் திருவேங்கடத்துக்கிவை பத்தும்*
*பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரியவானுள் நிலாவுவரே*
***( 6.10.11 )***

அதாவது ஸ்ரீ கீதை மோக்ஷஶாஸ்த்ரமாக இருந்த போதிலும் அது அவதரித்தது ப்ரயோஜனாந்தரத்தைத் தலைகட்டுவதற்காக. திருவாய்மொழியோ மோக்ஷார்த்தமாகவே அவதரித்தது என்ற ஏற்றம் உடையது. இந்த இரண்டு க்ரந்தங்களும் எவ்வாறு தொடங்கி எப்படி முடிகின்றன என்று காட்டி அவ்வகையாலும் திருவாய்மொழியின் ஏற்றத்தைக் காட்டுகிறார், நாயனார்.

192. அங்கு நம்பிஶரணென்று தொடங்கி முடிவில் அப்ரியமென்றது; இங்கு பரமேயென்றிழிந்து பொலிக பொலிகவென்றுகந்தது.

கீதையின் அவதாரத்தை "நாந்தக வாளேந்திய நம்பியே தஞ்சமென்று வந்தடைந்த தனஞ்சயனுக்காக" என்கிறார் பெரியாழ்வார்

*நாந்தகமேந்திய நம்பிசரணென்று*
*தாழ்ந்த தனஞ்சயற்காகித் தரணியில்*
*வேந்தர்களுட்க விஜயன் மணித்திண்தேர்*
*ஊர்ந்தவனென்னைப் புறம்புல்குவான்*
*உம்பர்கோன் என்னைப் புறம் புல்குவான்*

***( பெரியாழ்வார் 1.9.4 )***

போர்க்களத்தில் அர்ஜுனன் தர்மம் எது என்று அறியாமல் கலங்கிய போது शिष्यस्तेऽहं शाधिमां त्वां प्रपन्नम् - நான் உன் சீடன் உன்னைச் சரணடைந்த எனக்கு சரியான வழியைக் காட்டு" என்று வேண்ட கீதை அவதரித்தது. கீதோபதேசம் முடியும் தறுவாயில் அர்ஜுனன் வருந்த, கண்ணன் मा शुच: என்று சொல்ல நேர்ந்தது. பிறிதொரு ஸமயம் அநுகீதையில் கண்ணன்

नूनमश्रद्धधानोऽसि दुर्मेधाश्चासि पाण्डव।
अबुद्धया यन्न जानीषे तन्मे सुमहदप्रियम्।। என்கிறார்.

ஆழ்வாரோ ஸம்ஸாரிகளுடைய துர்க்கதியை எண்ணி

*ஏ பாவம் பரமே ஏழுலகும்*
*ஈபாவம் செய்து அருளாலளிப்பாரார்*
*மாபாவம் விட அரர்க்குப் பிச்சைபெய்*
*கோபால கோளரி ஏறன்றியே* ***( 2.2.2 )***

கண்ணனல்லால் விரோதியைப் போக்க வேறு உபாயமில்லை என்கிறார். ஒரு நிலையில் ஆழ்வார்க்கு உலகெல்லாம் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்தி நிறைந்ததாகத் தெரிய

*பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம்*
*நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை*
*கலியும் கெடும் கண்டுகொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்*
*மலியப்புகுந்து இசைபாடி ஆடியுழிதரக் கண்டோம்* **(5.2.1)**

என்கிறார். முடிவில் தாம் பெற்ற பேற்றை

*உற்றேனுகந்து பணிசெய்து உனபாதம்*
*பெற்றேன் ஈதேஇன்னம் வேண்டுவதெந்தாய்*
*கற்றார் மறை வாணர்கள் வாழ்திருப்பேராற்கு*
*அற்றாரடியார் தமக்கு அல்லல் நில்லாவே* **(10.8.10)**

என்று கூறுகிறார். இரண்டு க்ரந்தங்களிலுள்ள அர்த்த விசேஷத்தாலும் திருவாய்மொழியின் சிறப்பைக் காட்டுகிறார்.

193. அதில் ஸித்ததர்மவிதியே; இதில் வித்யனுஷ்டானங்கள்.

கீதையில் मामेकं शरणं व्रज என்று ஸித்தோபாயத்தைக் கண்ணன் உபதேஶிப்பது மட்டுமே உள்ளது.

ஆழ்வாரோ, "திருநாரணன்தாள் காலம்பெறச்சிந்தித்து உய்ம்மினோ" (4.1.1) என்று ஸித்தோபாயத்தை உபதேஶித்தும், த்வய மந்த்ரத்தின் பூர்வ வாக்யார்த்தத்தைக் காட்டுமிடத்தில் "அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" (6.10.10) என்று தம் அநுஷ்டானத்தையும் காட்டுகிறார். முடிவாக இந்த கீதைக்கு ஏற்றம் ஆழ்வார் அங்கீகாரத்தாலே என்கிறார் நாயனார்.

194. பகவன் ஞானவிதி பணிவகையென்று இவரங்கீகாரத்தாலே அதுக்கு உத்கர்ஷம்.

ஆழ்வார் தம் அருளிச்செயலில் கீதையை ப்ரமாணமாகக் கொள்கிறார்.

*பிணக்கற அறுவகைச் சமயமும் நெறியுள்ளியுரைத்த*
*கணக்கறு நலத்தனன் அந்தமிலாதியம்பகவன்*
*வணக்குடைத்தவநெறி வழிநின்று புறநெறி களை கட்டு*
*உணக்குமின் பசையற அவனுடையுணர்வு கொண்டுணர்ந்தே*

***( 1.3.5 )***

என்ற பாசுரத்தில் "அம்பகவன் வணக்குடைத்தவநெறி" என்பது ஸாங்க பக்தியாகவும் ப்ரபத்தியாகவும் பகவான் உபதேசித்த கீதையைச் சொல்லுகிறார் என்பது நம்பிள்ளை நிர்வாகம். ஸாங்கியம், பௌத்தம் முதலிய மதங்கள் எம்பெருமானுடைய அம்*ஶ*ாவதாரமான கபிலர், புத்தர் ஆகியோர் வெளிப்படுத்தியதா யிருந்த போதிலும் அவை வேத பாஹ்யமானதால் அவை ஏற்கத் தகாததென்று காட்டி கீதையை ப்ரமாணமாகக் கொள்கிறார்.

பட்டரும்

इति मोहनवर्त्मना त्वयाऽपि ग्रथितं बाह्यमतं तृणाय मन्ये।
अथ वैदिकवर्म वर्मितानां जनिताहे कुदृशां किमीश वर्त्म।।

**ஸ்ரீரங்கராஜஸ்தவம் - உத்தரசதகம் - 16**

என்று பாஹ்ய குத்ருஷ்டி மதங்களை தாம் அனாதரிப்பதைச் சொல்லுகிறார்.

மேலும் ஆழ்வார்,

*கண்டேன் கமலமலர்ப்பாதம் காண்டலுமே*
*விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்*
*தொண்டே செய்து என்றுந்தொழுது வழியொழுகப்*
*பண்டே பரமன் பணித்த பணிவகையே* **(10.4.9)**

என்று பரமன் பணித்த பணிவகையாக मामेकं शरणं ब्रज என்றபடி சரணாகதி பண்ணி விரோதிஸ்வரூபமான கர்மாக்கள் ஒழிந்து எம்பெருமான் அடியிணையை அடைந்து கைங்கர்யம் செய்யப் பெற்றேன் என்கிறார்.

இவ்வாறு கீதைக்கும் திருவாய்மொழிக்கும் உள்ள ஸாம்யத்தைச் சொல்லி கீதையிற் காட்டிலும் ஆழ்வார் அருளிச் செயலுக்கு உள்ள ஏற்றத்தையும் நாயனார் அருளிச் செய்கிறார்.

நம்மாழ்வாரே ஸர்வஸ்வமும் என்று வாழ்ந்திருந்த மதுரகவியாழ்வாரும் கீதையையும் திருவாய்மொழியையும் ஒப்பிட்டு திருவாய்மொழியே மேன்மையானது என்று முன்பே அருளிச் செய்துள்ள பாசுரம்.

*அருள்கொண்டாடும் அடியவர் இன்புற*
*அருளினான் அவ்வருமறையின் பொருள்*
*அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்*
*அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே*

**கண்ணிநுண்சிறுத்தாம்பு - 8**

ஸ்ரீ:



அடியோங்களுடைய திருத்தகப்பனார் ஸ்ரீ உ.வே. திருக்கண்ணபுரம் சடகோபாச்சாரியார் சிறு வயதிலிருந்தே காலக்ஷேபங்கள் கேட்டு வளர்ந்தவர். தமிழ், ஆங்கிலம், ஸம்ஸ்க்ருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தவர். பின்னாளில் ஸ்ரீரங்கம் கோயில் வித்வான் ஸ்ரீ உ.வே. நரஸிம்மாசாரியார் ஸ்வாமியிடம் ஸ்ரீ பாஷ்யம் மற்றும் ரகஸ்ய க்ரந்தங்களை வரியடைவே காலக்ஷேபம் கேட்டு அறிந்தார். தாம் அறிந்தவற்றை பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகளாக எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்று, இந்நூலில் வெளியிடப்பட்டுள்ள தத்வோபதேசமும் தத்வதர்ஸி வசனமும் என்ற கட்டுரை ஆகும். இத்தலைப்பு அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்த ஆசார்ய ஹ்ருதயம் என்னும் ஒப்பற்ற க்ரந்தத்திலிருந்து எடுக்கப்பட்டது. பெரும்பாலும் அருளிச் செயல்களில் உள்ள சொற்களாலேயே அமைந்த சூத்ரங்களைக் கொண்ட இந்த க்ரந்தத்தில், நாயனார் பகவத் கீதையையும் திருவாய்மொழியையும் ஒப்பிடுகிறார். ஆறு சூத்ரங்களால் கீதையையும் திருவாய்மொழியையும் ஒப்பிட்டு, இறுதியாக முன்னதைக் காட்டிலும் ஆழ்வாரின் அருளிச்செயலே ஏற்றம் மிகுந்தது என்றும், கீதையில் கூறப்பட்ட விஷயங்களை ஆழ்வார் அங்கீகரித்ததாலேயே அதற்குப் பெருமை என்றும் அருளிச் செய்துள்ளார். ஆசார்ய ஹ்ருதயத்திற்கு மணவாளமாமுனிகள் அருளிச் செய்த வியாக்யானத்தின் அடிப்படையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இதனை எம்பெருமான் அடியார்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

பூமா கிருஷ்ணன்
கண்ணம்மாள் கணபதி
மைதிலி மோகன்
பத்மா த்வாரகநாத்